(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 364.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 மே 23, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2368/ '12

1.
கௌரவ சஜித் பிரேமதாச,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) மஹிந்த சிந்தனை 'இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்' கொள்கைத் தொடரின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவாக ஒரு வேளை சோறு இலவசமாக வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின்படி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பகல் உணவு கிடைக்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பகல் உணவாக ஒரு வேளை சோறு வழங்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பகல் உணவு வழங்குவதற்காக மேற்படி பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3231/ '12

2.
கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையையும்;

(v) பணியாளர்களின் எண்ணிக்கை வேலைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளதா என்பதையும்;

(vi) ஒரு பணியாளருக்கான செலவினம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறாக வங்கி மேலதிகப் பற்றுடன் குறுங்காலக் கடன்கள் அத்துடன் இடைக்கால மற்றும் நீண்டகால கடன்களின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3593/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்குரெஸ்ஸ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை அக்குரெஸ்ஸ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3626/ '12

4.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் புதிதாக இடப்பட்ட"சன்விச்" ஓட்டப் பாதையை திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விடயத்தை ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) அவ்வாறெனின், அக் குழுவின் உறுப்பினர்கள் யார்;

(iii) மேற்படி குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iv) மேற்படி குழுவின் சிபாரிசுகள் யாவை;

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஓட்டப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்ட கம்பனி அல்லது நபர்கள் யாவர்;

(vi) இதன் நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக சனாதிபதி புலனாய்வுப் பிரிவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

3823/ '13

5.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறுநீரக நோயாளர்களின் குருதி மாற்றீடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் உள்ள குருதி மாற்றீடு இயந்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒரு நாளில் குருதி மாற்றீட்டுக்கு உட்படுத்தப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) சிறுநீரக நோயாளர்களின் குருதி மாற்றீடு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் தாதிமார் பதவியணியினர் மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள சுகாதார சேவைகள் அலுவலகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்கள் ஊடாக இதுவரை இனங்காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அநுராதபுர பொது வைத்தியசாலையில் சிறுநீரகப் பதியம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) சிறுநீரகப் பதியம் தற்போது இடம் பெறாவிடின் அதற்கான அசௌகரியங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

4290/ '13

6.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு தெற்கு துறைமுகத்தின் புதிய முனையமான அபிமன்தொட்ட முனையத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்கான நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி முனையத்தை நிர்மாணிப்பதற்கு சீன நிறுவனத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அதன் போது இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி புதிய முனையம் 2048 ஆம் ஆண்டு வரை சைனா மர்ச்சன்ட் ஹோல்டின் ஹொங்கொங் நிறுவனத்துக்கு 35 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள அறிக்கைகளில் உண்மையேதும் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், குத்தகைக்கு வழங்கும் நிபந்தனைகள், வருமானம் பகிர்ந்தளிக்கப்படும் விதம், தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் மேற்கொள்ளப்படும் விதம் யாவையென்பதையும்;

(iii) தேசிய பொருளாதார கேந்திரநிலையமான துறைமுகத்தை இவ்வாறு பகுதிகளாக குத்தகைக்கு அளிப்பதன் மூலம் துறைமுகத்தின் தொழிற்பாடுகள் தனியார் துறைக்கு அளிக்கப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4332/ '13

7.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் இயங்கி வருகின்ற கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கும் அமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வியியல் கல்லூரிகளில் சேவையாற்றுகின்ற பீடாதிபதிகளின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) கல்வியியல் கல்லூரி பீடாதிபதிப் பதவியை வகிப்பதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கல்வியியல் கல்லூரிகளில் விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், விரிவுரையாளர் பற்றாக்குறை காணப்படும் கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பாடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4438/ '13

8.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவ பட்டப் (MBBS) பாடநெறியை கற்பதற்காக மாலம்பேயில் அமைந்துள்ள SAITM தனியார் மருத்துவக் கல்லூரிக்கு முதல் தடவையாக மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) 2013 செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் மேற்படி பட்டப் பாடநெறியை கற்பதற்காக பதிவு செய்துள்ள உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் பதிவு செய்த மாணவர் ஒருவர் மேற்படி பாடநெறிக்காக செலுத்த வேண்டியுள்ள மொத்தப் பாடநெறிக் கட்டணம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனம் தாபிக்கப்படுகின்றபோது உள்நாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கான முறையியல் ஒன்றுக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த இணக்கப்பாடு யாது என்பதையும்;

(vi) அதற்கமைய தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் முழுமையான புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4528/ '13

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற கடமைப்பொறுப்பு அலுவலர் (Group Officer) பதவிக்கு அலுவலர்களை நியமிக்கும் முறையானது, தற்போது அமுலிலுள்ள கணக்காய்வுப் பரிசோதகர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) சேவைமூப்பு, நேர்முகப் பரீட்சை, போட்டிப் பரீட்சை அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய மேற்படி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4585/ ’13

10.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டவர்களுக்கு மற்றும்/ அல்லது வெளிநாட்டு கம்பனிகளுக்கு தனியார் காணி விற்பனை செய்தல் பற்றிய தடையை அரசாங்கம் முன்மொழிந்ததையும், 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளிலும் அது வலியுறுத்தப்பட்டதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) ‘அவிக் இன்டர் நேஷனல் ஹொடெல்ஸ் லங்கா லிமிடட்’ (Avic International Hotels Lanka Ltd)என்ற பெயரிலான சீனக் கம்பனியொன்று அல்லது அதனுடன் தொடர்புடைய தரப்பொன்று ‘ஷோ வெல்ஸ் அண்ட் ஹெட்ஜஸ்’ (show Wallace and Hedges) அல்லது அதனுடன் தொடர்புடைய நிறுவனத்திடமிருந்து காலி வீதியை எல்லையாகக் கொண்ட 200 பேர்ச் காணியை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்;

(ii) அதே கம்பனி மேற்படி காணிக்கு அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ஏறத்தாழ 50 பேர்ச் காணியை கொள்வனவு செய்துள்ளதா அல்லது நீண்டகால குத்தகைக்குப் பெற்றுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை அரசாங்கத்திற்கு ‘அவிக் இன்டர்நேஷனல் ஹொடெல்ஸ் லங்கா லிமிடட்’ (Avic International Hotels Lanka Ltd) அல்லது அதனுடன் தொடர்புடைய தரப்பினரால் வரிகள், முத்திரை தீர்வை அல்லது ஏதேனும் வேறு அறவீடுகள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4665/ ’13

11.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்ற பதவிகள் யாவை என்பதையும்;

(ii) 2005 முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் பதவிகள் தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4745/ '14

12\.

கௌரவ அசோக் அபேசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் விவசாய இரசாயனப் பிரிவொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய இரசாயனப் பொருட்களை விநியோகிக்கும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரிவிற்கு களஞ்சிய வசதிகள் உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி களஞ்சியசாலைகளில் காலாவதியான விவசாய இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி காலாவதியான விவசாய இரசாயனப் பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2505/ '12

13\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்பத்நுவர வித்தியாலயத்தில் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பத்நுவர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3233/ '12

14\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களை கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3737/ '13

15\.

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டு ஒன்றிணைந்த அஞ்சல் சேவையின் “ஆ” பிரிவில் 1 “ஆ” தரத்தின் அஞ்சல் உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஆட்சேர்ப்புக்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சித்தியடைந்தவர்களில் இற்றைவரை ஆட்சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களை ஆட்சேர்ப்பதற்கு ஏற்புடையதாக்கிக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச புள்ளிகள் யாவையென்பதையும்;

(v) தகைமையானவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் புள்ளிகளுக்கு மேலதிகமாக இவர்களின் கனணி அறிவை உறுதிப்படுத்தும் பொருட்டு பரிசீலிக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அஞ்சல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கின்றபோது அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்டவர்களுக்கு நியமனங்களை வழங்காமல், குறைந்த புள்ளிகளை பெற்றுக்கொண்டவர்களுக்கு நட்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகள் குற்றம்சாட்டுகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சம்பந்தமாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடாத்தி அநீதிக்கு உள்ளாகியவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்தேதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## அனுதாபப் பிரேரணை

1\.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்க.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

8.

ஶ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

9.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

10.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

12.

மொஹான் லால் கிரேரு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

13.

விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

பண்டு பண்டாரநாயக்க ஹெல ஜன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி பீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

மிஸ்டிகல் ரோஸ் சர்வதேச நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

ஸ்ரீ லங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

இலங்கை எழுத்தாளர்கள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.